மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நாட்டின் நடவடிக்கைகள் தென் மாவட்டங்களில் மட்டுமல்ல, தென் அமெரிக்காவிலேகூட அடுத்த நிமிடமே தெரிந்து விடுகிறது. நவீன காலத்தில் அங்கே போய் இரண்டாவது அலுவலகம் இருப்பதால் ஏற்படுவது ஒன்றும் இல்லை.

திரு. ம. பொ. சிவஞானம் : பேரவைத் தலைவரவர்களே, முன்னொரு காலத்தில் சென்னை நகரம் வேறொரு மொழி வழி மாகாணத்தில் கூட்டுத் தலை நகராக இருக்க வேண்டுமென்று கோரிக்கை கிளப்பப்பட்டது. இப்போதுகூட மொழிவழியில் அடிப்படையில் சென்னை நகரின் முக்கியத்துவத்தை குறைக்க திட்டமிட்டு இருப்பதாகத் தெரிவதால் இந்த பிரச்னையில் கேள்விக்கு இடம் இல்லாமல் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சென்னை நகரின் முக்கியத்துவத்தை யார் சார்ந்தாலும் குறைக்க முடியாது. மதுரையைப்பற்றி சொல்லும்போது மதுரைக்கு முக்கியத்துவம் தரவேண்டும். 4--5 மாவட்டங்களின் மையமாக இருக்கிறது. அதுவும் இப்போது போட்டி போட்டுக்கொண்டு முன்னேறி வருகிறது. இதிலே கேள்விக்கு எதுவும் இடமில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அன்று மதுரை தலைநகராக இருந்ததால் அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்று என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. ஏதாவது தவறுகிவிட்டால் அதுவே எமனாகி விடும் என்பது சர்க்காருக்கு தெரியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தவறு செய்தால் தான் யமனாக முடியும். யாரும் இங்கே தவறு செய்யவில்லை. தவறு செய்யாதவர்கள் எமனைக் கண்டு பயப்படத் தேவையில்லை.

Licence for sale of wine.

* 2 *P.N.Q.*—THIRU P.G. KARUTHIRUMAN : Will the Honourable the Chief Minister be pleased to state—

(*a*) the number of applications received by the Government of Tamil Nadu for the grant of licences to sell wine, foreign wine in Madras City from 1st April 1967 to 3rd April 1970;

(*b*) the number and names of applicants who were granted licences;

(*c*) the number and names of applicants who were refused licences with reasons therefor?

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) எட்டு.

(இ) கீழ்க்கண்ட ஐந்து விண்ணப்பதாரர்களுக்கு உரிமங்கள் வழங்கப் பட்டன.

(1) திருவாளர் டி. எம். சம்பத் அண்டு டி. எம். சரவணன் சென்னை-17.

(2) மதராஸ் ஒயின், சென்னை-34.

(3) எசன் ஜீ கம்பெனி, சென்னை-18.

(4) ஜீ. ஆர். டிரேடர், சென்னை-34.

(5) திரு. எம். ராமசாமி, சென்னை-17.

1970 செப்டம்பர் 8]

(உ) கீழ்க்கண்ட மூன்று பேருடைய மேல் முறையீட்டு மனுக்கள் அரசாங்கத்தால் தள்ளுபடி செய்யப்பட்டன :—

(1) திரு. எம். கோபால கிருஷ்ணன், சென்னை-12.

(2) திரு. வி. எம். தட்சிணாமூர்த்தி, சென்னை-20.

(3) திரு. எஸ். பி. மகாதேவன், சென்னை-1.

இந்த மூன்று பேர்களுக்கும் உரிமம் வழங்குவது, உள்ளூர் தேவைகளைக் கருதிப் பார்க்குமிடத்து நியாயமாக இல்லை என்று குறிப்பிடவிரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நாம் மது விலக்கை தீவிரமாக அமுல் நடத்து கிறோம் என்று சொல்லும்பொழுது, இது மாதிரி பெர்மிட்கள் வழங்குவதினால் மது விலக்குச் சட்டத்தை மீறுவதற்கும், தவறுகளைச் செய்வதற்கும் இடம் கொடுக்காதா ? இதை சர்க்கார் அறிவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கனவே இருதய நோயின் காரண மாக பெர்மிட் பெற்றிருந்தவர்கள் 2,800 பேர்கள். இப்பொழுது அந்த நோய் அதிகமாகி 4,000 பேர்கள் அளவுக்கு பெர்மிட் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். சொந்த உபயோகத்திற்கு பெர்மிட் வைத்துள்ளவர்கள் 30 பேர்கள். மற்றும் கிளப்புகளில் வாங்குவதற்கு உரிமம் பெற்றுள்ளவர்கள் 25 பேர்கள். சிறப்பு அனுமதி அவ்வப்பொழுது பெறுகிற 15 பேர்கள் ஆகியோர்களுக்கு மது அளிக்கக்கூடிய அளவில் இடங்கள் தேவைப்படுமாகையால், அவர்களுக்கும் அளிக்கலாம் என்ற அடிப்படையிலே இப்படி அளிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கிற 4,000 பேர்களுக்கு, சென்னை மாநகரத்திலே பெர்மிட் பெற்றிருப்பவர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிற கடைகளே போதாது. மொத்தம் 25 கடைகள் இருக்கவேண்டும். ஏற்கனவே 1966 வரையிலே 10 கடைகள் தான் இருக்கின்றன.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதல் அமைச்சர் அவர்கள் முதலிலே 2,000 பெர்மிட்களாக இருந்தது 4,000 ஆக அதிகரித்துவிட்டது என்று சொன்னார்கள். இதுவும் அவர்களுடைய ஒரு சாதனை என்று சர்க்கார் பிரசாரம் செய் வார்களா? 4,000-க்கு அதிகரித்திருக்கிறது . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை ஒட்டி இது வராது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : முன்பெல்லாம் ரூ. 2,000 வருமானம் உள்ளவர்களுக்குத் தான் பெர்மிட் கொடுக்க வேண்டுமென்ற ஒரு விதி விதிக்கப்பட்டிருந்தது. அந்த விதி இப்பொழுது தளர்த்தப்பட்டுவிட்டது. இருதய நோய் ரூ. 2,000 வருமானம் இல்லாதவர்களுக்கும் வரலாம். சம தர்மம் இருக்கவேண்டும். ஜனநாயக சோஷலிசம் பேசுகிற மாபெரும் தலைவர்கள் வாழ்கின்ற நாடு அல்லவா இது ? நாமும் சோஷலிச பாதையிலே போகவேண்டும் என்ற எண்ணத்தில், இருதய நோய் ரூ. 2,000-க்கு குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கும் வரலாம் என்று கருதி அந்த ரூ. 2,000 என்ற நிலைமையை எடுத்துவிட்டோம். ஆகவே, இப்பொழுது 4,000 பெர்மிட்கள் வழங் கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. விநாயகம் : இப்பொழுது புதியதாக உரிமம் பெற்றவர்களிலே யாராவது ஒருவர் பெண்மணியாக இருக்கிறார்களா? ஏற்கனவே இந்தத் துறையிலே 'பிரிவியஸ் எக்ஸ்பீரியன்ஸ இன் திஸ் டிரேட்' என்று சொல் கிறோமே, அது யாருக்கு இருக்கிறதோ அவர்களுக்குத் தான் தரவேண்டும்

என்ற ஒரு விதி இருக்கிறதே? அதையும் மீறி ஏன் நியூ என்ட்ரன்ட்ஸ்க்கு, இதிலே அனுபவம் இல்லாதவர்களுக்கு தந்ததற்குக் காரணம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: லாகிரிச் சட்டத்தின்கீழ் விற்கும் உரிமையை அவர்கள் ஏற்கனவே வைத்திருந்தார்கள். அந்தச் சட்டம் நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே எடுக்கப்பட்டுவிட்டது. ஆகவே, அந்த விதி இங்கே மேற்கொள்ளப்படவில்லை. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000 லைசென்ஸ் தொகை கட்டவேண்டும். போதுமான மூலதனத்தை உடையவராகவும் சட்டத்தின் விதித் துறைகளையும் அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளையும் பின்பற்றுபவராகவும், எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு நல்ல நிலையில் உள்ளவராகவும், இருக்கவேண்டும். இதெல்லாம் பழைய உத்திரவின்படி போடப்பட்ட விதிகள். மேலும், தமக்கு ஆதாயம் தேடிக் கொள்ளும் வகையில் தான் வாங்குகின்ற மதுவின் அளவை வேண்டுமென்றே அதிகரிக்கமாட்டாதவராக, மதுவிலக்குத் திட்டம் சரிவரச் செயல்படுவதற்கு அரசுடன் ஒத்துழைப்பவராக இருக்க வேண்டும் என்கின்ற விதிகளின் அடிப்படையிலே தான் இவைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவே ஆண், பெண் என்ற வித்தியாசமே இல்லை, விதிகளின்படி, முறைப்படி தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. விதிகளில் பெண்ணுக்குக் கொடுக்கக்கூடாது என்று இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இருதய நோய் ஏற்பட்டிருப்பவர்களுக்கு மது பெர்மிட் கொடுப்பதினால் அவர்களின் நோய் போகமுடியும் என்று அரசாங்கம் நம்புகிறதே, அதே மாதிரி டி.பி. நோய் வந்தவர்களுக்கும், வயிற்று வலி நோய் வந்தவர்களுக்கும் கள்ளு குடிப்பதற்கு பெர்மிட் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது இருதயத்தை அடிப்படையாக வைத்து வழங்கப்படுகிறது. அதற்குப் பிறகு எல்லா நோய்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்றால், கிட்டத்தட்ட மது விலக்கையே ரத்து செய்து விட்டோம் என்று ஆகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

வெள்ளாளப்பட்டி கிராமத்தில் மாணவர்கள் கையில் ஆசிரியர் கற்பூரத்தை கொளுத்தி தீக்காயங்கள் ஏற்படுத்தியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பராஜா, திரு. சித்தன் ஆகியோர்கள் வெள்ளாளப்பட்டி கிராமத்தில் காணமல் போன புத்தகத்தை எடுத்த மாணவரைக் கண்டறிய பள்ளி மாணவர்கள் எல்லோருடைய கைகளிலும் கற்பூரத்தைக் கொளுத்தி தீக்காயங்கள் ஏற்படுத்திய பள்ளி ஆசிரியரின் கொடுமையைப் பற்றி விவாதிக்கவேண்டும் என்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதிக்கப்படுகின்ற நேரத்தில் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு இடம் தருவது முறையல்ல. மேலும் உறுப்பினர்களுக்கு நம்பிக்கையில்லாத்